தமிழகத்தில் காலியாக உள்ள

மாநிலங்களவை உறுப்பினர் பதவி காங்கிரசுக்கு ஒதுக்கீடு

முதல்வர் விஜய் அதிகாரப்பூர்வ அறிவிப்பு

சென்னை, ஜூன் 4: தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தலில் அதிமுகவை சேர்ந்த சி.வி.சண்முகம், விழுப்புரம் மாவட்டம் மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனையடுத்து, அவர் ஏற்கனவே வகித்து வந்த தனது மாநிலங்களவை எம்பி பதவியை, மே 7ம் தேதி ராஜினாமா செய்தார். இந்த காலியிடத்துக்கான இடைத்தேர்தல், ஜூன் 18ம் தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது.

இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 1ம் தேதி துவங்கியது. ஜூன் 8ம் தேதி வரை வேட்பு மனு தாக்கல் செய்யலாம், என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 9ம் தேதி வேட்புமனுக்கள் மீது பரிசீலனை செய்யப்படும். வேட்புமனுவை திரும்ப பெற ஜூன் 11ம் தேதி கடைசி நாளாகும்.

இதையடுத்து, வரும் 18ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. போட்டியிருந்தால், அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தேர்தல் நடைபெற்று, அன்று மாலையே வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. அதன்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் வேட்பு மனு தாக்கல் கடந்த திங்கள் காலை 11 மணிக்கு துவங்கிய நிலையில் சுயேச்சை வேட்பாளர்களான தேர்தல் மன்னன் பத்மராஜன் மற்றும் அக்னி ஆழ்வார் ஆகியோர் மாநிலங்களவை தேர்தல் நடத்தும் அதிகாரி தேன்மொழியிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர். நேற்று மேலும் ஒரு சுயேச்சை வேட்பளார் ஆவடி வி.ஜெயக்குமார் வேட்புமனு தாக்கல் செய்தார். அரசியல் கட்சிகள் சார்பில் இதுவரை யாரும் மனு தாக்கல் செய்யவில்லை.

இந்த நிலையில், தமிழகத்தில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை எம்பி பதவியை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கவேண்டும் என்று காங்கிரஸ் மேலிட பார்வையாளர் கிரீஷ் சோடங்கர் நேற்று பிற்பகல் தலைமை செயலகத்தில் தவெக தலைவரும் முதல்வருமாக விஜய்யை சந்தித்து கோரிக்கை வைத்தார். இதையடுத்து நேற்று தவெக கட்சி தலைவர் விஜய் வெளியிட்ட அறிக்கையில், 'இந்த மாதம் 18ம் தேதி தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட உள்ள மாநிலங்களவை உறுப்பினருக்கான தேர்தலில், தமிழ்நாட்டில் தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான கூட்டணியில் இடம் பெற்றுள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு மாநிலங்களவை உறுப்பினர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, என்று கூறியுள்ளார்.

103வது பிறந்த நாள் கோலாகலம்

கலைஞர் நினைவிடத்தில் மு.க.ஸ்டாலின் மரியாதை

அன்பகத்தில் 75 அடி உயர கம்பத்தில் கொடி ஏற்றினார்

சென்னை, ஜூன் 4: மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞரின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அன்பகத்தில் புதுப்பிக்கப்பட்ட 75 அடி உயர பிரமாண்ட கம்பத்தில் திமுக கொடியை ஏற்றி வைத்தார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழித்தோன்றலாக திமுக எனும் பேரியக்கத்தை சுமார் 50 ஆண்டு காலம் கட்டிக் காத்த கலைஞரின் 103வது பிறந்தநாள் நேற்று தமிழகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அதன்படி, மெரினா கடற்கரையில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 8 மணி அளவில் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

அவருடன், எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, திமுக முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினர். தொடர்ந்து காலை 8.15 மணிக்கு மு.க.ஸ்டாலின் சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் கலைஞரின் சிலைக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து காலை 8.30 மணியளவில் மு.க.ஸ்டாலின், கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி வளாகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். காலை 8.45 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள கலைஞரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன் பின்னர் காலை 10 மணி அளவில், தேனாம்பேட்டையில் அமைந்துள்ள திமுக இளைஞரணியின் தலைமையகமான அன்பகத்தில் 75 அடி உயர பிரமாண்ட கம்பத்தில் திமுக கொடியை மு.க.ஸ்டாலின் ஏற்றினார். மேலும் திராவிட இயக்கத்தின் தூண்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகிய மூவரின் சிலைகளையும் அவர் திறந்து வைத்தார். மேலும் புதுப்பிக்கப்பட்ட அன்பக அலுவலகத்தையும் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளால் அன்பகம் வளாகம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. இதை முன்னிட்டு சென்னை முழுவதும் இருந்து திமுக தொண்டர்கள், முக்கிய நிர்வாகிகள் திரண்டு வந்திருந்ததால் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சிகளில், எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், திமுக துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா, கனிமொழி, பொருளாளர் டி.ஆர்.பாலு, முன்னாள் அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி, சேகர்பாபு, பொன்முடி, அன்பில் மகேஷ், டி.ஆர். பி.ராஜா, ஜெகத்ரட்சகன் எம்பி மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று திமுக கிளை கழகங்கள் தொடங்கி, அனைத்து அமைப்புகளின் சார்பிலும் கலைஞரின் படத்தை வைத்து, கட்சியினர் அனைவரும் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் செய்திருந்தனர். மேலும் தமிழகம் முழுவதும் திமுக சார்பில் பொதுக்கூட்டங்கள், நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள், விளையாட்டு போட்டிகள் என தொடர் நிகழ்ச்சிகள் நடத்தியும் கோலாகலமாக கொண்டாடினர்.

அண்ணா அறிவாலத்தில் அமைந்துள்ள கலைஞர் சிலைக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்த போது, அங்கு குழுமியிருந்த ஏராளமான திமுக மாற்றுத்திறனாளிகளுக்கும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினருக்கும் இனிப்பு பொட்டலங்களை வழங்கி வாழ்த்தினார்.

இதில், திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் ரெ.தங்கம், அணி செயலாளர் தீபக்நாதன், அணி துணைச் செயலாளர்கள் க.எழிலன், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணை பொதுச்செயலாளர் பா.சந்தானகிருஷ்ணன், மாநில பொருளாளர் க.இளங்கோவன், சென்னை மாவட்ட அமைப்பாளர் சங்க தர்மலிங்கம் மற்றும் ஏராளமான மாற்றுத் திறனாளிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

கலைஞரின் 103வது பிறந்த நாளையொட்டி மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அருகில், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், எம்.பி.கள் கனிமொழி, டி.ஆர். பாலு, முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, பொன்முடி, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, சேகர்பாபு, டி.ஆர்.பி.ராஜா, சாமிநாதன் உள்ளிட்டோர்.

சென்னை அண்ணாசாலை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

38 மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்கள் நியமனம்

தலைமைச் செயலாளர் உத்தரவு

சென்னை, ஜூன் 4: தமிழகத்தில் மொத்தமுள்ள 38 மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து தமிழக தலைமைச் செயலாளர் சாய்குமார் நேற்று வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

இயற்கைசீற்றம், நோய்த்தொற்று மற்றும் பல்வேறு இடர்பாடான சூழ்நிலைகளில் மாவட்ட அளவில் கூர்ந்தாய்வு செய்து, விரைவுபடுத்தும் வகையில் ஏற்கனவே இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்து அரசு கண்காணித்து வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், அமைச்சர்களை இப்பணியில் ஈடுபடுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

அதன்படி அமைச்சர்கள், அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்து, அந்தந்த மாவட்ட வளர்ச்சி பணிகளை துரிதப்படுத்தவும், பொது மக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணிக்கவும் வருவாய் மாவட்ட வாரியாக அமைச்சர்களை பொறுப்பு அமைச்சர்களாக செய்யப்படுகின்றனர். அது வருமாறு:

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் புஸ்சி ஆனந்த் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டத்திற்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா சென்னை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், உணவுத்துறை அமைச்சர் வெங்கடரமணன் மயிலாடுதுறைக்கும், தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் குமார் திருவள்ளூருக்கும், நிதித்துறை அமைச்சர் மரியவில்சன் நெல்லைக்கும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் பெரம்பலூருக்கும், வெளிநாடு வாழ் தமிழ்நாடு நலத்துறை அமைச்சர் தென்னரசு காஞ்சிபுரத்திற்கும், வனத்துறை அமைச்சர் ரஞ்சித்குமார் திருப்பத்தூருக்கும், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமார் செங்கல்பட்டுக்கும், சமூக நீதித்துறை அமைச்சர் வன்னியரசு கள்ளக்குறிச்சிக்கும், கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் ராணிப்பேட்டைக்கும், வீட்டு வசதித்துறை அமைச்சர் ராஜ்குமார் தர்மபுரி மற்றும் அரியலூருக்கும் பொறுப்பு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஷாஜகான் நாகப்பட்டினத்துக்கும், வேளாண்மைத்துறை அமைச்சர் வினோத் தஞ்சாவருக்கும், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் ரமேஷ் திருச்சிக்கும், பால்வளத்துறை அமைச்சர் விஜயலட்சுமி கரூருக்கும், வணிகவரித்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன் நாமக்கல், சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ், திருப்பூருக்கும், கால்நடைத்துறை அமைச்சர் கமலி நீலகிரிக்கும், கைத்தறித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி வேலூருக்கும், வருவாய் துறை அமைச்சர் செங்கோட்டையன் ஈரோட்டுக்கும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் கோவைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எரிசக்தித்துறை அமைச்சர் நிர்மல்குமார் மதுரை மற்றும் தேனிக்கும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முகமது பர்வேஸ் புதுக்கோட்டைக்கும், இயற்கை வளங்கள்துறை அமைச்சர் பிரபு சிவகங்கைக்கும், தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா கிருஷ்ணகிரிக்கும், சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி விருதுநகருக்கும், உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் திருவாரூருக்கும், மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் தூத்துக்குடிக்கும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா ராமநாதபுரத்துக்கும், போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் சேலத்திற்கும், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் கன்னியாகுமரிக்கும், சுற்றுச்சூழல்துறை அமைச்சர் ராஜேஷ் தென்காசிக்கும், மதுவிலக்குத்துறை அமைச்சர் விக்னேஷ் திண்டுக்கல்லுக்கும் பொறுப்பு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை தொடர்கிறது

மாணிக்கம் தாகூர் ஒப்புதல்

விருதுநகர், ஜூன் 4: விருதுநகர் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் மாணிக்கம் தாகூர் எம்பி செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

பாஜ மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை தைரியம் உள்ளவராக இருந்திருந்தால் கட்சியில் இருந்து விலகுவதை கடிதமாக அனுப்பி இருக்கவேண்டும். அவர், ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அனுமதி பெறச் சென்றது சரியானதாக இல்லை. தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையே தொடர்கிறது. இதை சரி செய்வேன் என முதல்வர் ஜோசப் விஜய் வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்துள்ளார். போலீஸ் துறையில் உள்ள பிரச்னைகளை சரி செய்ய முயற்சிக்கிறார். அதை சரி செய்வதற்கு போதிய அவகாசம் வழங்க வேண்டும்.

பேருந்து நிலையம், கோயில்கள், கல்வி நிறுவனங்கள் அருகே உள்ள பகுதிகளில் டாஸ்மாக் கடைகள் மூடுவதாக தமிழக முதல்வர் அறிவித்தார். ஆனால் பெரும்பாலான கடைகள், அந்தப் பகுதிகளில் இருந்து அகற்றாமல் இருப்பது குறித்து கலெக்டர் மற்றும் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்க உள்ளேன். மேகதாது அணை தொடர்பாக கர்நாடகாவில் அரசியலுக்காக பேசுகின்றனர். பெங்களூருவில் தண்ணீர் பிரச்னையை தீர்க்க முடியாததற்கு அணை கட்டுவதை காரணமாக கூறி சமாளிக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார். அப்போது விருதுநகர் காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாவட்ட தலைவர் கிருஷ்ணமூர்த்தி, பாலகிருஷ்ண சாமி, சிவகுருநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தலைமை செயலகமா? தவெக அலுவலகமா?

வானதி சீனிவாசன் கண்டனம்

சென்னை, ஜூன் 4: பாஜ மகளிரணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன் தனது சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டில் காலியான ஒரு மாநிலங்களவை எம்.பி பதவியை காங்கிரஸ் கட்சிக்கு கொடுப்பது தொடர்பான பேச்சு வார்த்தை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது கடும் கண்டனத்திற்குரியது. எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்த அதிமுக எம்.எல்.ஏக்கள் தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சர் ஆதவ் அர்ஜூனா அறையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர். இப்போது கூட்டணி பேச்சுவார்த்தையும் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இதனால் தமிழ்நாடு அரசின் தலைமை செயலகமா? அல்லது தவெக தலைமை அலுவலகமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கலைஞரின் கனவுகள் காலங்கள் கடந்து தமிழின் திசையெங்கும் ஒளிவீசி நிற்கும்

முதல்வர் விஜய் புகழாரம்

சென்னை, ஜூன் 4: கலைஞர் 103வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு:

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் 103-வது பிறந்தநாளில், தமிழ் மொழி, இலக்கியம், திரைத்துறை, அரசியல், ஆட்சி நிர்வாகம் மற்றும் மாநில உரிமைகள் போன்றவற்றில் அவரது பங்களிப்பை நினைவுகூர்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் எனது மரியாதை கலந்த வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன். தமிழின் மூச்சாய் வாழ்ந்தவர் நீர், முன்னேற்றப் பாதையை காட்டிய ஒளி நீர். சொல்லால் சமுதாயம் செதுக்கிய சிற்பி, செயலால் தமிழகத்தை உயர்த்திய கற்பி.

எழுத்திலும் பேச்சிலும் எந்நாளும் அரசர், ஏழையின் இதயத்தில் என்றும் நிலை பெற்றவர். கலைஞரின் கனவுகள் காலங்கள் கடந்தும், தமிழின் திசையெங்கும் ஒளிவீசி நிற்கும். பிறந்த நாள் இன்று, புகழ் நாள் என்றும், பேரறிஞர் வழியில் பயணம் தொடர்ந்தும் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு

என்றும் எங்கள் அன்பும் வணக்கமும்.

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A அசையாச் சொத்து/களின் மின்-ஏலம் பொது விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: 1வது தளம், கந்தஸ்வர்ணா ஷாப்பிங் மால், ஐந்து சாலைகள், சேலம் - 636004, தமிழ்நாடு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்-A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்-C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்-D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்-A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால். (K)
HOU/SLM/0123/1072258 & NHL/ SLM/0123/1072451 கார்த்திகேயன் எம் / பிரியங்கா கே, கி.அ.:- சேலம்	Rs. 1,10,47,734.46 & 09.12.2024	கையக	வார்டு எண். 11, கதவு எண். 12A, ஜலகண்டாபுரம் சாலை, எடப்பாடி, இடைப்பாடி, சேலம், தமிழ்நாடு, 637101.	Rs. 86,49,000	Rs. 8,64,900	22.06.2026	Rs. 20,000	10.06.2026 11:00 AM to 05:00 PM	23.06.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்-K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்- K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனானஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்- K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், விற்பனை உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் கட்டாயக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விற்பனைப் பரிசீலனைத் தொகையின் பகுதிப் பணத்தைப் பறிமுதல் செய்வார், மேலும் சொத்து/கடனீட்டு சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும். 4. M/s. ஃபோர்குளோசர்இந்தியா.காம் மின்-ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் 605 ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட், ஹைதராபாத்-500038, இணையதளம்-info@bank.eauctions.in இடத்தில் அதன் தலைமை அலுவலகம் கொண்டிருக்கும் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபரை திரு. ஏங்கெல்ஸ்/ துர்கேஷ்/ ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண், செல்பேசி: 9344007827 / 9042840151/ 9840487424 / 9738931789, மின்னஞ்சல்: auction@pnbhousing.com அல்லது www.pnbhousing.com - ஐ காணவும்.

இடம்:- சேலம், நாள்:- 03.06.2026

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்